1

**திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்–4826/அ1/2022 நாள் 20.04.2022**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி திருவண்ணாமலை மாவட்டம், பெருமணம், அரசு உயர்நிலைப் பள்ளி – இளநிலை உதவியாளர் திருமதி.ர.அர்ச்சனா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 21.09.2020 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1.அரசாணை எண்191/பொதுத் துறை நாள்01.2.1962
2.அரசு கடிதம் எண் 6463/73–3 பொது நாள் 30.07.1963
3.தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-I2/2020, நாள்.21.07.2020
4.திருவண்ணாமலை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5534/அ1/2020 நாள்.17.09.2020
5.திருவண்ணாமலை, மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.8/அ1/2022, நாள்.23.03.2022.

*************

திருவண்ணாமலை மாவட்டம், பெருமணம் அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.ர.அர்ச்சனா என்பாருக்கு பார்வை (3)ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு துணை செயலரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை (4)ல் திருவண்ணாமலை, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் அளிக்கப்பட்டு 21.09.2020 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டிய கருத்துரு இவ்வலுவலகம் பெறப்பட்டுள்ளது.

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படியும், பார்வை( 5)ல் காணும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையிலும் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.மேலும், தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

20/4/22

பெறுநர்
திருமதி.ர.அர்ச்சனா, (உரிய வழியில்)
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
பெருமணம்

நகல்:
அரசு உயர்நிலைப் பள்ளி, பெருமணம்.

நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர் திருவண்ணாமலை.